**<u>சார்பு நீதிமன்றம். துறையூர்</u>**

**முன்னிலை .திரு. எம்.ஜெய்சங்கர். எம்.ஏ.,பி.எல்.,**

**சார்பு நீதிபதி.**

**துறையூர்.**

**2025ம் ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1ம் நாள் சனிக்கிழமை**

**<u>இடைநிலை மனு எண்.1/2024 இன் அசல் வழக்கு எண்.54/2021</u>**

சரவணன் ....மனுதாரர்கள் /வாதி

/எதிராக/

1. பாலா
2. ஹரி
3. கஜேந்திரன்
4. கலை
5. காயத்ரி
6. கலைச்செல்வன் .... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

செல்வகுமார் .... 3ம் தரப்பினர்

இம்மனு இன்று 25.02.2025 என்முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சரவணன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் ஒருதலைப்பட்டனர், 6,7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.V.செல்வகுமார் அவர்களும் ஆஜராகி இருதரப்பு வாதங்கள் கேட்டும், மனுக்கள் ஆவணங்களை பரிசீலனை செய்தும் நீதிமன்றம் வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1விதி 10-ன் கீழ் 7வது எதிர்மனுதாரரை பிரதிவாதியாக சேர்க்ககோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர்களின் மனுசுருக்கம்:-</u>**

2.மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தினை பொறுத்து விளம்புகை மற்றும் பாகப்பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னர் தாவா சொத்தினை 3ம் தரப்பினர் செல்வகுமார் 6ம் பிரதிவாதியிடம் இருந்து கடந்த 14.07.2021ம் தேதி கிரையம் பெற்றுள்ளார். அது துறையூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 3ம் தரப்பினரின் செயல் சட்டத்திற்கு முரணானது. வாதியின்

பங்குரிமையை எவ்விதத்திலும கட்டுப்படுத்தாது.மேற்படி ஆவணத்தை ரத்து செய்ய விளம்புகை பரிகாரம் 3ம் தரப்பினர் செல்வகுமாரை தரப்பினராக சேர்த்து வழக்கை நடத்த நீதியின் பொருட்டு நியாயமும் அவசியமும் ஆகும். மனுவை அனுமதிக்கும்போது எதிர்மனுதாரர்களுக்கு கஷ்ட நஷ்டம் ஏற்படபோவதில்லை. மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு பரிகரிக்க முடியாத கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே செல்வகுமார் என்பவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க உத்தரவிட கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரரின் பதிலுரை சுருக்கம்</u>**

3.மனு சட்டப்படியும், உண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல . சிறப்பாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளைத்தவிர மற்றவை மறுக்கப்படுகிறது. 3ம் தரப்பினர் செல்வகுமார் 6ம்பிரதிவாதியிடம்இருந்து 14.07.2021ல் கிரையம் பெற்றுள்ளார் என்றும் அது சட்டத்திற்கு முரணானது அது வாதியை கட்டுப்படுத்தாது என்றும் அவரை தரப்பினராக சேர்த்து வழக்கினை நடத்த வேண்டும். உத்தரவு பிறப்பிப்பதால் எவ்வித கஷ்ட நஷ்டம் ஏற்படாது என்று கூறுவது முற்றிலும் உண்மையல்ல.

4.வழக்கு சொத்து குண்டுமூப்பன் பெயரிலும் பின்னிட்டு அண்ணாதுரை பெயரிலும் பட்டா ஏற்பட்டு 12.08.2011ம் தேதி அண்ணாதுரை கலைச்செல்வனுக்கு சர்வே எண்.117/2 ஏக்கர் 0.18 செண்ட் சர்வே எண்.116/3ஏ ஏக்கர் 1.48 செண்ட் ஆக 1.66 செண்டு நிலத்தை கிரையம் பெற்றுள்ளார். கலைச்செல்வன் பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டு செல்வகுமாருக்கு கிரையம் செய்ய முற்பட்டபோது வில்லங்க சான்றிதழில் 03.09.1975 தேதியிட்ட ஈட்டுக்கடன் பத்திரம் இருந்ததால் அதனை ரத்து செய்தால் தான் பத்திரம் பதிவு செய்யப்படும் என்று தெரிவித்த காரணத்தினால் வாதி சரவணன் 19.03.2021ம் தேதி குண்டுமூப்பன் வாரிசுகளுக்கு ரசீது எழுதிக்கொடுத்தார். அன்றைய தேதியில் சரவணனுக்கு எந்த உரிமையும் இல்லை வருவாய் துறையில் முதலில் கலைச்செல்வன் பெயரிலும் பின்னிட்டு 3ம் பிரதிவாதி செல்வகுமார் பெயரிலும் பட்டா 3021, 1112 பட்டா ஏற்பட்டுள்ளது. 3ம் தரப்பினர் ஆவண எண்.4206/21ஐ ரத்து செய்ய மனு தாக்கல் செய்து அரியலூர்மாவட்ட பதிவாளர் வாதிக்கு எந்த ஒரு உரிமையும் இல்லை என உத்தரவு பிறப்பித்துள்ளார். அதை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை. இந்நிலையில் 3ம் தரப்பினராக சேர்க்க வேண்டி தாக்கல் செய்த மனு நிலைக்கத்தக்கதல்ல. அனாவசியமான மனுவாகும். மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

5.இருதரப்பு மனுக்கள், ஆவணங்களை பரிசீலனை செய்ததில், இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

**<u>தீர்வு..</u>**

6.இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனுதாரர் தன் மனுவில் 3ம் தரப்பினர் செல்வகுமார் 6ம் பிரதிவாதியிடம் இருந்து 14.07.2021ல் கிரையம் பெற்றுள்ளார் என்றும், எனவே அவரை தரப்பினராக சேர்க்கக்கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் கடுமையான ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரருக்கு எதிராக அரியலூர் மாவட்ட பதிவாளர் வாதிக்கு எந்தவொரு உரிமை பாத்தியம் இல்லை என்று 22.04.2022ல் உத்தரவு போட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட பதிவாளர் தனிநபரின் உரிமை பாத்தியத்தை முடிவு செய்ய முடியாது. உரிமையியல்நீதிமன்றம் தான் உரிமையியல் வழக்கை முடிவு செய்ய முடியும். மாவட்ட பதிவாளர் உத்தரவு நீதிமன்ற உத்தரவு அல்ல. 3ம் தரப்பினர் செல்வகுமார் வழக்கு சொத்தில் ஒரு பகுதியை வழக்கு நிலுவையில்இருக்கும்போது கிரையம் பெற்றது ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் ஆகும். எனவே அவரை தரப்பினராக சேர்த்தால் தான் அவர் தரப்பில் நியாயம் கேட்டு வழக்கு முற்று பெறும். வழக்கு முழுமை அடைய அவசியமான தரப்பினர் தேவை ஆகும். தேவையான தரப்பினர்களை கொண்டு வழக்கு நடத்தி தீர்ப்பு பகரும்போது வழக்கு முழுமையாக முற்று பெறும். இம்மனுவை அனுமதிப்பதனால் எதிர்மனுதாரர்களுக்கு கஷ்ட நஷ்டம் ஏற்படாது. இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரர் முழுமையான தீர்ப்பு பெற முடியாது. எனவே நீதியின் நலன் கருதி 3ம் தரப்பினர் செல்வகுமாரை இவ்வழக்கில் 7ம் பிரதிவாதியாக சேர்க்க உத்தரவிட்டு மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இறுதியாக, மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இன்று 2025-ம் ஆண்டு மார்ச் மாதம் 01-ம் நாள் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு மொழியப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறிய
பகரப்பட்டது.

(Sd)/- M. Jaisankar
சார்பு நீதிபதி,
துறையூர்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் .. இல்லை.</u>**

(Sd)/- M. Jaisankar
சார்பு நீதிபதி,
துறையூர்.